<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 24.02.2026

அசல் வழக்கு எண். 254/2021

வா.சா.1 – ஆறுமுகம், த/பெ. கணேசன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**குறுக்கு விசாரணை**</u>

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். வழக்கு எதற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் சொத்து எங்களுடைய சொத்து என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் உள்ள தனலட்சுமி ஹோட்டல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு அசல் வழக்கு எண் 37/2021 என்கிற வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் இதே பரிகாரம் கேட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். இரண்டு வழக்கிலும் ஒரே சொத்து தான் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நீங்கள் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்கள் அதில் கண்ணம்மாள் உங்கள் அம்மா என்று காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் ஆர்.ஆர்.கிளப் மூலமாக செட்டில்மெண்ட் செய்துள்ளார்கள். கண்ணம்மா உங்கள் அம்மா என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்து கொண்டீர்களா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் ஜக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும். வடக்கில் ரோடு உள்ளது காலியாக உள்ளது, தெற்கு பக்கத்தில் என்ன உள்ளது என்றால் காலி மனை உள்ளது, கிழக்குப் பக்கத்தில் என்ன உள்ளது என்றால் ஆர்.ஆர்.கிளப் உள்ளது, மேற்கு பக்கத்தில் நீதிமன்றம் உள்ளது. உங்களிடம் காட்டப்படுகின்ற ஆவணம் உங்கள் அம்மா

உங்களுக்கு எழுதிய செட்டில்மெண்ட் என்றால் சரிதான் அது வழக்கில் வா.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதில் வடக்கு பக்கம் காமராஜர் சாலையிலிருந்து முன்சீப் நீதிமன்றம் செல்லும் வழி என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெற்கில் நீதிபதி குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்ட பகுதி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கில் சிங்கப்பூர் சீமாட்டி காமராஜர் சாலை வீடுகளின் புழக்கடை என்று உள்ளது என்றால் சரிதான். ஜக்குபந்தியில் மாறுபாடு உள்ளது நீங்கள் எவ்வாறு சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. குறிப்பிட்டு வழக்கு சொத்தில் ஜக்குபந்தி விவரம் இல்லை என்றால் சரிதான். வழக்கிலும் வழக்கு சொத்தில் ஜக்குபந்தி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடைக்கு உண்டான அளவுகளை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நீளம் அகலம் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். கடை எண் என்ன தெரியுமா என்றால் 13 ஆகும். கடை எண் நீங்களாக நிர்ணயம் செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 435/2A ஆகும். செட்டில்மென்ட் ஆவணத்தில் நீங்கள் சொல்லி இருக்கும் சர்வே எண் எங்காவது வருகிறதா என்றால் சர்வே எண் இல்லை. வழக்கு சொத்து ஆதியில் ருத்ர முனுசாமி என்பவருக்கு சொந்தமானது என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அதையே உங்கள் பிரமாணம் வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய செட்டில்மெண்ட் ஆவணத்தில் கங்காதர ஐயர் என்பவருக்கு சொந்தமானது என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கே ஆர்.ஆர் டென்னிஸ் கிளப் எழுதிக் கொடுத்ததாக

சொல்கிறீர்கள் அந்த தேதி ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகம் இல்லை எனக்கு எழுதி கொடுக்கவில்லை எங்கள் அம்மாவுக்கு தான் எழுதி கொடுத்தார்கள். இந்த வழக்குவுடன் அசல் வழக்கு 78/2010 என்கிற வழக்கு எதற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் அந்த வழக்கு எங்களுக்கும் டென்னிஸ் கிளப் இடையே நடைபெற்ற வழக்காகும் அதில் சமாதானம் ஏற்பட்டது. அந்த வழக்கு கடந்த 14.07.2018 அன்று முடிவடைந்தது. அசல் வழக்கு எண்.748/1999 இல் சமாதானம் ஏற்பட்டது என்று ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரிதான். அந்த வழக்கு முடிவடையும் முன்பாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது தெரியாது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.